# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 10 | December 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10

JESUS REDEEMS MINISTRIES




கிறிஸ்துவின் அன்பை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் மறுக்காமல் மறைக்காமல்

## தாராளமாய் கொடு!




# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!







**எனக்குப் பிரியமான வாலிப மகனே, மகளே!**
**உங்கள் யாவருக்கும் என்னுடைய அன்பின் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!**

இப்பத்திரிக்கையைக் குறித்தான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.



அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

எனக்கு அன்பான வாலிபர்களே,

இயேசுவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! டிசம்பர் மாதம் வந்தாலே ஒரு மகிழ்ச்சி உண்டாகிறது. காரணம், உலகமெங்கும் கிறிஸ்து பிறப்பின் நாளை ஒவ்வொருவரும் கொண்டாடுவார்கள்.

இந்தக் கொண்டாட்டங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், மறுபக்கம் சுமார் 146 கோடி மக்களுக்கும் மேலாக வாழும் நம் இந்திய தேசத்தில் இன்னும் எத்தனைக் கோடி ஜனங்கள் இயேசு என்னும் நாமத்தை அறியாமல் வேதனையிலும், துக்கத்திலும், இருளிலும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்களே என்ற வருத்தமும், ஏக்கமும் அனுதினமும் நமக்குள் இருக்க வேண்டும்.

சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு. காரணம் அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசிங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! என்று பவுல் சொல்வதைப் போல, சுவிசேஷத்தை அறிவிக்கும் வாஞ்சை ஒவ்வொரு வாலிபர்களின் இருதயத்திலும் கொழுந்துவிட்டு எரிய வேண்டும்.

சமீபத்தில் நடந்த World Cup Semi finalலில் இந்திய அணிக்காக அதிரடி ஆட்டத்தை ஆடிய ஜெமிமாவின் ஆட்டத்தை உலகமே பார்த்து வியந்தது. அதைவிட ஜெமிமாவின் நேர்காணலில் வெட்கப்படாமல் வெற்றிக்குக் காரணமாய் இருந்த இயேசுவை உயர்த்தியதையும், இயேசுவின் நாமத்தை அறிக்கை செய்ததையும் கண்டங்கள் பார்த்துப் பரவசம் அடைந்தது.

அநேகர் போராடும் போது இயேசுவை அழைப்பதும், வெற்றி பெற்ற பின்னர், உலக அரங்குகளில் எப்படி நான் இயேசுவின் நாமத்தைச் சொல்ல முடியும் என்றும், என் விசுவாசம் எனக்குள் இருக்கட்டும் என்றும் பலர் இயேசுவை தங்களுக்குள் வைத்துக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில்,

எனக்குள்ளும் இயேசு, என் எல்லாம் இயேசு, என் வெற்றியே இயேசு என்று உலக அரங்குகளில் பகிரங்கமாய் பாசத்தோடு இயேசுவின் நாமத்தைச் சாட்சியாய் கூறி, அநேகருக்குள் நானும் இயேசுவின் நாமத்தைப் பயமின்றி அறிவிக்க முடியும் என்ற ஒரு விசுவாசத்தையும் உத்வேகத்தையும் தட்டி எழுப்பியது மெய்சிலிர்க்க வைத்தது.

**வாலிபனே! இந்தக் கிறிஸ்மஸ் மாதத்தில் நீ தயங்காமல், தரித்து நிற்காமல், தாமதிக்காமல் தாராளமாய் கொடுக்க வேண்டியது...**

**"அனைத்து இந்தியர்களுக்கும் இயேசுவின் அன்பை"!!**

கிறிஸ்துவின் பணியில்
மோகன் சி. லாசரஸ்



சாட்சி தொகுப்பு: சாம்

# புதிய பயணம்



**பெங்களூர் பட்டணத்தில் பிறந்து, சிறு வயதிலேயே Reels, Tiktok போன்ற வலைத்தளங்களுக்கு அடிமைப்பட்டு, அடி, தடி சண்டை என்று இளம் வயதிலேயே பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்த சகோதரரைத் தேவன் எப்படி தொட்டு விடுதலையாக்கினார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோமா?**

## உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?

என் பெயர் மணி ஆபிரகாம். நான் பெங்களூரில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். என்னுடைய பெற்றோர் இயேசுவை அறியாத குடும்பத்தைச் சார்ந்தவர்கள். எனக்கு 2 அண்ணாவும் ஒரு அக்காவும் இருக்கிறார்கள். என்னுடைய பெரிய அண்ணன் சிறுவயதாக இருக்கும்போது, கால் வீங்கி நடக்க முடியாமல் இருந்தார். அப்பொழுது எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள கிறிஸ்தவ குடும்பத்தார், எனது அம்மாவிடம் நீங்கள் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தால் உங்கள் மகனுக்குச் சுகம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதனால் எங்கள் அம்மா அண்ணாவை அழைத்துக் கொண்டு ஆலயத்திற்கு சென்றார்கள். ஆண்டவர் அண்ணாவுக்கு சுகம் கொடுத்தவுடன், இயேசு தான் உண்மையான கடவுள் என்பதை அறிந்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, எங்களையும் கிறிஸ்துவை பின்பற்ற வழிநடத்தினார்கள்.



## உங்களுடைய சிறு பிராயம்...


எனது அம்மா இயேசுவின் மீது அதிக பற்றுள்ளவர்களாக இருந்தார்கள். ஆகையால் ஆலயத்திற்கு தவறாமல் சென்று வருவார்கள். எங்களையும் அப்படியே பழக்குவித்தார்கள். ஆனால் நான் சிறு வயதிலிருந்தே எனது தாயாரின் வற்புறுத்தலின் பேரினால் தான் ஆலயத்திற்கு செல்வேனே தவிர, நானாக விருப்பப்பட்டு போனதாக எனக்கு நியாபகம் இல்லை. ஞாயிற்றுக் கிழமை படம் போடுவார்கள், படம் பார்க்கச் செல்ல வேண்டும் என்று அந்த நினைப்பாகவே இருப்பேன். ஆராதனை முடிந்தவுடன் அப்படியே படம் பார்க்கச் செல்வது, நண்பர்களுடன் சேர்ந்து விளையாடச் செல்வது என்று தான் என்னுடைய வாழ்க்கை இருந்தது.



### உங்களுடைய பள்ளி வாழ்க்கைப் பற்றிச் சொல்லுங்களேன்?

மேல்நிலைப் பள்ளி படிக்கும்போது என்னுடைய குணங்கள், பேச்சு, நடை உடை எல்லாமே மாற ஆரம்பித்தது. பள்ளியில் நான் தான் class leaderஆக இருந்தேன். இது எனக்குள் பெருமையைக் கொண்டு வந்தது. அந்தப் பொறுப்பை நான் தவறாக உபயோகப்படுத்த ஆரம்பித்தேன். எப்படியென்றால், நான் சொல்வதை எல்லோரும் கேட்கிறார்கள், அப்படியானல் leader என்றால் நாம் சொல்வதை எல்லோரும் கேட்பார்கள், எனவே நான் ஒரு ரௌடி ஆக வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் வந்தது. பள்ளிப் படித்துக் கொண்டிருக்கும்போதே, என் பையில் எப்பொழுதும் பட்டன் கத்தி வைத்திருப்பேன். விளையாட்டாக என் நண்பர்களைக் குத்துவது போல் செய்து, என்னிடம் கத்தி இருக்கிறது என்பதை அவர்களிடம் காண்பித்துக் கொண்டே இருப்பேன். இது என் வீட்டிற்கு தெரியாது. கெட்ட வார்த்தை பேசுவது, எல்லோரையும் திட்டுவது இப்படி தான் எனது வாழ்க்கை இருந்தது.

என்னுடைய கல்லூரி வாழ்க்கை ஆரம்பிக்கும்போது எனக்கு நண்பர்கள் அதிகமாக இருந்தார்கள். என்னைப்போலவே கத்தி வைத்துக் குத்த வேண்டும், அடிக்க வேண்டும் அதுபோல் குணமுடைய நண்பர்கள் தான் எனக்குக் கிடைத்தார்கள். Lockdown நாட்களில் இந்த மூர்க்க குணங்கள் இன்னும் அதிகரிக்க ஆரம்பித்தது. எங்குச் சண்டை என்றாலும் நாங்கள் 2 அல்லது 3 பேர் சேர்ந்து அவர்களை அடிப்பது, எனக்கு யாரையாவது பிடிக்கவில்லை என்றால் வேண்டுமென்றே சண்டை போடுவது என்று என் வாழ்க்கைப் போய்க் கொண்டிருந்தது. எப்பொழுதும் என்னுடன் 3 அல்லது 4 பேர் இருப்பார்கள். என் கையில் 10 பேர் இருக்க வேண்டும், நான் பெரிய ரௌடிகளுக்கு தலைவனாக வேண்டும் என்று ஒரு எண்ணமும் வந்தது. அதனால் பெரிய பெரிய ரௌடிகளின் வரலாறை தேடிப் படித்துப் படித்து என்னையே நான் ஊக்கப்படுத்திக் கொள்வேன்.





அதுமட்டுமல்லாமல் tik tok பண்ண வேண்டும் என்ற எண்ணம் என் மனதிற்குள் இருந்து கொண்டே இருக்கும். Reelsக்கு நான் மிகவும் அடிமையாக இருந்தேன். தினமும் reels எடுத்துப் போட்டு அதைப் பார்த்து எல்லோரும் like போடும்போது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். அதனால் அதை நான் தொடர்ந்து செய்து வந்தேன்.

### சரி... Reels, ரௌடிஸம் என்று இருந்த உங்கள் வாழ்க்கை எப்படி ஆண்டவர் பக்கம் திரும்பியது?

நான் பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்தாலும், அவ்வப்போது ஆலயத்திற்குச் சென்று வருவேன். குடும்ப ஜெபம், தனி ஜெபம், வேத வாசிப்பு எதுவுமே கிடையாது. கடமைக்காக ஆலயத்திற்கு சென்று வருவேன். தேர்வு நாட்கள் வரும்போது பயத்தினால் ஒரு சிறு ஜெபம் செய்வேன். கல்லூரிக்குப் போகும்போது வேதத்தில் ஒரு அதிகாரம் படித்துவிட்டு செல்வேன். மற்றபடி ஒரு கிரமமான ஜெபமோ, வேத வாசிப்போ இல்லை. இயேசுவைப் பற்றி எதுவுமே எனக்குத் தெரியாது. பெயருக்கு ஆலயத்திற்கு போவேன் வருவேன் அவ்வளவுதான்.

இந்தச் சூழ்நிலையில் 2022ஆம் ஆண்டு அக்காவின் மகளுக்கு உடம்பு சரி இல்லாமல் போகவே,

எங்கள் பட்டணத்தில் உள்ள எல்லா மருத்துவமனைக்கும் கொண்டு சென்றும் எந்தப் பலனும் இல்லை. இதனால் எங்கள் குடும்பமே வேதனையோடும், துக்கத்தோடும் இருந்தது. அந்த நேரத்தில் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்கு போன் செய்து ஜெபித்தோம். அப்பொழுது ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். நாங்கள் தொடர்ந்து பார்க்க ஆரம்பித்தோம். நானும் பார்ப்பேன். மோகன் அங்கிள் முதலாவது பாவமன்னிப்புக்காக ஜெபித்த பின்பு தான் அற்புதங்களுக்காக ஜெபிப்பார்கள். அன்றைக்கு ஒரு நாள் அப்படி ஜெபித்த பின்பு அற்புதங்களுக்காக ஜெபிக்கும்போது, வியாதிஸ்தர்கள் மேல் கைவைத்து ஜெபியுங்கள் கர்த்தர் அற்புதம் செய்வார் சென்று சொன்னார். நான் என் அக்கா மகள்மீது கை வைத்து ஜெபிக்கும்போது, உன் கையை எடு, உன் பாவம் தான் குழந்தைக்கு அற்புதம் செய்யத் தடையாக இருக்கிறது என்று அங்கிள் சொன்னார்கள். உடனே நான் தனியாகச் சென்று என்னுடைய பாவ மன்னிப்பிற்காக என்னை ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். அதற்குப் பிறகு அதுவரைக்கும் இல்லாத ஒரு சமாதானம் எனக்குள் வந்தது. என் பாவம் மன்னிக்கப்பட்டது என்ற ஒரு நம்பிக்கை வந்தது. எனக்கு அப்படியே வானத்தில் பறக்கிறது போல் இருந்தது. தொடர்ந்து ஜெபிக்கலாம் வாங்க பார்த்து வசனத்தைக் கேட்க ஆரம்பித்தோம். குடும்ப ஜெபம் செய்ய ஆரம்பித்தோம். முக்கியமாக 10 நிமிடம் கூட ஜெபிக்காத நான், மணிக்கணக்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். சில நாட்களுக்குப் பிறகு நாலுமாவடியில் நடந்த **Igniters campல்** கலந்துகொண்டேன். 3 நாட்கள் எழுப்புதல் மற்றும் இயேசுவின் வருகைப்பற்றி மிகவும் தெளிவாகக் கற்றுக் கொண்டேன். புதிய அபிஷேகத்தை பெற்றுக் கொண்டு என் பட்டணத்திற்கு சென்று ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்தேன். அதன்பிறகு என்னுடைய வாழ்க்கையே மாற ஆரம்பித்தது.

தற்பொழுது நான் வேலை நேரம் தவிர சுவிசேஷ ஊழியம் செய்து வருகிறேன். அதுமட்டுமல்லாமல் எங்கள் சபை போதகரோடு இணைந்து ஊழியம் செய்யும்படியான கிருபையைக் கர்த்தர் கொடுத்திருக்கிறார்.




## வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

வாலிபர்களாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கையை தேவனுக்கென்று அர்ப்பணித்து, அவருக்குப் பிரியமில்லாத காரியங்களை அகற்றி, கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கும்போது அவருக்கு ஏற்றப் பாத்திரமாக உங்களை எடுத்துப் பயன்படுத்துவார். என்னுடைய வாழ்வில் நான் எதைவிட வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தாரோ அதை ஒப்புக்கொடுத்து ஜெபித்தபோது கர்த்தர் என்னையும் எடுத்துப் பயன்படுத்த ஆரம்பித்தார். அதேபோல் உங்களுக்கும் செய்வார்.

*அன்பான வாலிபர்களே! ரெடி ஆகவேண்டுமென்று அதற்காகப் பிரயாசப்பட்ட சகோதரர் மணி ஆபிரஹாம் அவர்களைத் தேவன் தொட்டு இயேசுவிற்கு வைராக்கியமாக ஊழியம் செய்யும் ஒரு வாலிபனாக மாற்ற முடியுமானால், இன்றைக்கு இப்படி பலவிதமான பாவங்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் நீங்களும், இவரைப் போல் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கும்போது, உங்களையும் தேவன் புது பயணத்திற்கு நேராக நடத்தி செல்வார்.*

புதிர்: ரேச்சல்


# வேதாகம புதையல் வேட்டை

கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பக்கத்தில்
கொடுக்கப்பட்ட படத்தில்
விடைகள் மறைந்திருக்கிறது. அதைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பவும்.

1. இயேசு கிறிஸ்து எங்கே பிறந்தார்?
2. தேவதூதன் யாரிடம் பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் என்று சொன்னான்?
3. கிழக்கிலிருந்து யார் எருசலேமுக்கு வந்து அவரைப் (இயேசுவை) பணிந்து கொண்டார்கள்?
4. மரியாளின் முன் தோன்றிய தூதனின் பெயர் என்ன?
5. பிள்ளையைத் துணிகளில் சுற்றி ................ கிடத்தி இருந்தார்கள்?
6. தேவனால் கூடாத காரியம் ____________ என்றான்?
7. இயேசுவைக் கொலை செய்ய நினைத்த இராஜாவின் பெயர் என்ன?
8. இயேசு என்ற பெயரின் பொருள் என்ன?
9. இம்மானுவேல் என்ற பெயரின் பொருள் என்ன?
10. ஒரு கன்னிகை இயேசுவைப் பெற்றெடுப்பாள் என்று முன்னுரைத்த தீர்க்கதரிசியின் பெயர் என்ன?




பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்
15.12.2025




கடந்த மாத வெற்றியாளர்
சகோதரி சோனியா, ஈத்தவிளை
அவர்களை வாழ்த்துகிறோம்.

கடந்த மாத விடைகள்

சங்கீதம் 20:7
சங்கீதம் 92:12
சங்கீதம் 100:2
சங்கீதம் 119:14
சங்கீதம் 118:12
சங்கீதம் 51:7

சரியான விடை அனுப்பும் ஒரு நபருக்கு பரிசு உண்டு.

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org



# நன்மை செய்யுங்கள்!

செய்தி:
மோகன் சி. லாசரஸ்

**அவன் (கொர்நெலியு) தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தானதருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். (அப் 10:23).**

கொர்நெலியு என்ற நூற்றுக்கதிபதிக்கு உண்மை தெய்வம் யாரென்று தெரியாவிட்டாலும், தெய்வம் என்று ஒருவர் இருக்கிறார், அந்தத் தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து, பயத்தோடு நடக்க வேண்டும் என்று அவன் அறிந்திருந்தபடியால் அவன் ஏழை, எளிய மக்களுக்குத் தானதர்மங்களையும் செய்து வந்தான். உன் ஜெபங்களும், உன் தர்மங்களும் தேவ சமூகத்தில் வந்து எட்டி இருக்கிறது என்று கொர்நேலியுவிடம், தேவதூதன் சொன்னார். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது அது பரலோகத்தில் தேவனுக்கு முன்பாகப் போய் நிற்கிறது. ஆகவே நன்மை செய்யவும் தானதர்மம் செய்யவும் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

## ஏன் நன்மை செய்ய வேண்டும்?

### தேவ கட்டளை

**தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய் திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் (உபா 15:11).** ஆண்டவர் ஏழை, எளியவர்கள் மீது கரிசனையும் அக்கறையுமுள்ள தேவன். ஆகவேதான் இந்தக் கட்டளையை ஆண்டவர் எழுதி வைத்திருக்கிறார். ஒரு ஏழையை அவமானப்படுத்தினாலோ, அசட்டைப்பண்ணினாலோ நீங்கள் அவனை உண்டாக்கின ஆண்டவரையே நிந்திக்கிறதாக வேதம் சொல்லுகிறது (நீதி. 17:5).

எளியவர்களை அற்பமாக எண்ணக் கூடாது. அவர்கள்மீது தேவன் அக்கறை யுள்ளவராக இருக்கிறார்.



## கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்** (நீதி 19.17). ஏழைகளுக்குக் கொடுக்கும்போது கர்த்தருக்கே கடன் கொடுக்கிறீர்கள் என்பதாய் வேதம் சொல்லுகிறது.

தசமபாகம், காணிக்கையை சபைக்கு ஊழியத்திற்கு கொடுக்கும்போது மட்டும் தான் கர்த்தருக்குக் கொடுக்கிறோம் என்று அநேகர் நினைக்கிறார்கள். ஒரு ஏழைக்குக்கோ, ஒரு விதவைக்கோ, ஒரு தகப்பன் இல்லாத பிள்ளைக்கோ உதவி செய்யும்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீங்கள் நன்மை செய்யும்போது கர்த்தருக்கு கடன் கொடுக்கிறீர்கள். ஏழைகளுக்கு நீங்கள் செய்யும் நன்மையைக் கர்த்தர் உங்களுக்குத் திரும்பக் கொடுப்பார்.

''ஊழியத்திற்கு எப்படியொரு பங்கை எடுத்து வைக்கிறாயோ, அதேபோல் ஏழைகளுக்கும் ஒரு பங்கை எடுத்து வை'' என்று ஆண்டவர் என்னோடு பேசினார். எனவே என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திலும் சரி காணிக்கையில் ஒரு பங்கை ஊழியத்திற்கும், ஒரு பங்கை ஏழைகளுக்கும் ஒதுக்கி வைக்கிறோம்.

அதுபோல எனது தனிப்பட்ட வாழ்க்கையில் எனக்கென வரும் காணிக்கைகளில் ஒரு பங்கு தசமபாகம்,

தேவையுள்ள ஊழியர்களுக்கு ஒரு பங்கு மற்றும் ஒரு பங்கு ஏழைகளுக்கென்று பிரித்து வைப்பேன். ஆண்டவர் எந்த ஏழைக்குக் கொடுக்கச் சொல்கிறாரோ அந்த நபருக்கு நான் கொடுப்பேன். ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் மற்றவர்களுக்கு நன்மை செய்யப் பழக வேண்டும். ஏனென்றால் இது தேவன் நமக்குக் கொடுத்துள்ள கட்டளையாக இருக்கின்றது.

## நன்மை யாருக்குச் செய்ய வேண்டும்:

### செய்யத் தக்கவர்களுக்கு செய்யுங்கள்:

**நன்மை செய்யத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே** (நீதி. 3:27). எல்லோருக்கும் செய் என்று வேதம் சொல்லவில்லை. செய்யத்தக்கவர்களுக்கு செய்ய வேண்டும் என்று வேதம் சொல்கிறது. ஒருநாள் இரண்டு கைகளுமே இல்லாத மனிதர் ஒருவர் என்னைச் சந்திக்க வந்தார். அவரைப் பார்த்தால் யாருக்குமே மனதுருக்கம் வரும். ஆனால் அவர்மேல் எனக்கு இரக்கமே வரவில்லை. ''மகளுக்குத் திருமணம் வைத்திருக்கிறேன், நான் எங்கும் போய் வேலை செய்ய முடியாது, திருமணத்திற்காக வருகிறவர்களுக்கு சாப்பாடு போட வேண்டும் அதற்குக் காசு இல்லை ஐயா'' என்று அழுதார். ஏனோ எனக்குள் அவருக்கு உதவ வேண்டும் என்ற ஏவுதலைக் கர்த்தர் கொடுக்காததால் முகவரியைக் கொடுத்து விட்டுப் போகச் சொன்னேன். கிறிஸ்மஸ் தினத்தை ஒட்டி ஒருவரிடம் பணத்தைக் கொடுத்து, அவரைக் குறித்து விசாரித்தப்பின் பணத்தைக் கொடுங்கள் என்று சொல்லி அனுப்பினேன். கிராமத்தில் சென்று விசாரித்தபோது, ''அவருடைய பிள்ளைகளுக்குத் திருமணம் முடிந்து எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டது, அவருடைய வீட்டில் இன்றைக்கு திருமணம் எதுவும் கிடையாது'' என்று சொன்னர்கள். அந்த மனிதர் ஏமாற்றி பணம் வாங்குவதற்கு என்னிடம் வந்திருக்கிறார். அதனால் தான் ஆண்டவர் என் இருதயத்தை அடைத்துவிட்டார். அதனால்தான், செய்யத் தக்கவர்களுக்கு செய்ய வேண்டும், ஏழைகளுக்கு உதவுங்கள், ஏமாற்று கிறவர்களுக்கு உதவி செய்யக் கூடாது என்று ஆண்டவர் சொல்கிறார்.

## விசுவாச குடும்பத்தாருக்கு செய்யுங்கள்:

ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம் (கலா. 6:10). ஜாதி மத வித்தியாசம் பார்க்காமல் யாராயிருந்தாலும் அவர்களுக்குத் தேவை இருக்கிறதா என்று பார்த்து உதவி செய்யுங்கள். விசவாச



குடும்பத்தாருக்கும் நன்மை செய்ய வேண்டும். குறிப்பாக, இயேசுவை அறிந்து புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஒரு கஷ்டம் என்றால், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒரு விசுவாசிக்கு உதவி செய்ய யாரும் இல்லாமல் இருக்கும்போது அவர்களுக்கு நன்மை செய்யாமல் இருப்போமானால் அது பாவம்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமத்திற்கு ஊழியத்திற்கு சென்றபோது, ஒரு ஏழை தாய், படித்து முடித்துப் பல வருடங்கள் ஆகியும் வேலை இல்லாமல் இருந்த ஒரு வாலிப மகள், அவர் கணவருக்குத் திடீரென்று கண் பார்வை இல்லாமல் போனதால் வேலைக்குச் சென்று சம்பாதிக்க முடியாமல், எந்த ஒரு வருமானமும் இல்லாமல் இருந்தார்கள். அடுத்த வேளை சமைப்பதற்கு வீட்டில் ஒரு பிடி அரிசி கிடையாது. நான் ஏன் வாழ வேண்டும்? உதவுவதற்கு உறவினர்கள் யாரும் இல்லை என்று அந்தத் தாயார் கண்ணீரோடு சொன்னார்கள். பாரத்தோடு அந்தக் குடும்பத்திற்காக ஜெபித்து விட்டு வெளியே வரும்போது, ஆண்டவர் போஷிப்பார் என்று சொல்கிறாயே? நான் யாரைக் கொண்டு போஷிப்பேன்?

உன்னைத்தானே நான் அனுப்பியிருக்கிறேன், நீ கொடு என்று ஆண்டவர் சொன்னார். உடனே என் பாக்கெட்டில் எவ்வளவு இருந்ததோ அதை அவர்கள் கரத்தில் கொடுத்து, கலங்காதீர்கள்! இப்போது ஆண்டவர் உங்களைப் போஷிக்கிறது போல, இனி ஒவ்வொரு நாளும் போஷிப்பார். திடமனதாயிருங்கள்! என்று சொல்லி நான் வந்துவிட்டேன். சில மாதங்கள் கழித்து, ''என் மகளுக்கு வேலை கிடைத்தது'' என்று சந்தோஷமாக வந்து சொன்னார்கள். மகிழ்ச்சியோடு தேவனுக்கு மகிமை செலுத்தினோம்.

## தேவ ஊழியர்களுக்குச் செய்யுங்கள்:

திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன் (கலா. 6:6). யார் மூலமாய் வசனத்தைக் கேட்டு ஆசீர்வதிக்கப்படுகிறீர்களோ, அந்த வசனத்தைச் சொல்கிறவர்களுக்கு நன்மைகளைப் பகிர்ந்துக் கொடுக்க வேண்டும். ஊழியர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று வேதம் சொல்கிறது. உங்கள் கிராமத்தில், பட்டணத்தில் கிராமம் கிராமமாகச் சென்று சுவிசேஷம் அறிவிப்பவர்கள், கைப்பிரதி ஊழியம் செய்கிறவர்கள், நடந்து ஊழியம் செய்கிறவர்களுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுக்கலாம். ஒருவேளை உணவு கொடுக்கலாம், ஒரு உடை வாங்கிக் கொடுத்து அவர்களை ஊழியத்தில் உற்சாகப்படுத்தலாம். வசனத்தை உங்களுக்குப் போதிக்கும் போதகர்களுக்கு நன்மையைப் பகிர்ந்து கொடுங்கள். கர்த்தருடைய ஊழியர்களைச் சாரிபாத் விதவையைப் போல் உபசரித்துப் பாருங்கள், கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் (மத். 25:40).

## எப்படி நன்மை செய்ய வேண்டும்?

கடன் வாங்காமல், உங்கள் கையில் உள்ளதிலிருந்து ஒரு பங்கைக் கர்த்தருக்குக் கொடுங்கள். உங்கள் அருகில், சபையில் இருக்கும் விசுவாச குடும்பங்கள் மற்றும் உங்களுக்குத் தெரிந்த ஊழியர் மற்றும் மிஷனெரிகளின் தேவையை அறிந்து உதவுங்கள். உங்களுடன் படிக்கும் சக மாணவர்கள் இருப்பார்களானால் அவர்கள் படிப்பிற்கான உதவியைச் செய்யுங்கள். ரோட்டோரத்தில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்புகளை உண்டுப்பண்ணிக் கொடுங்கள். அப்படி நீங்கள் செய்யும்போது கர்த்தர் உங்களை அதிகமாய் ஆசீர்வதிப்பார்.

**அன்பான வாலிப மகனே(ளே), இந்த மாதம் அதிகமாய் நன்மை செய்யவும், ஏழைகளுக்குக் கொடுத்து உதவும்போதும், தேவனுடைய உள்ளம் மகிழ்ச்சி அடையும். இந்த மாதம் மட்டுமல்லாமல், எப்பொழுது வேண்டுமானாலும் ஏழைகளுக்குத் தாராளமாய் கொடுக்கக் கொடுக்க தேவன் உங்களுக்கும் தாராளமாய் கொடுப்பார்.**






தகவல்: டியூக் ரிச்சர்ட்

**ஹாய் பிரண்ட்ஸ், நல்லா இருக்கீங்களா? வருஷத்தின் கடைசிக்குள்ள வந்துட்டோம் பல டிரண்டியான காரியங்கள் குறித்து ஒவ்வொரு மாதமும் பார்த்து வருகிறோம். நமக்குப் பாதகத்தை உண்டு பண்ணுகிற காரியத்திலிருந்து விடுபட முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.**

இந்த மாதமும் முக்கியமாக ஒரு காரியத்தை நாம் ஆராய்ந்து பார்த்து நிதானித்துச் செயல்பட இருக்கிறோம். இந்நாட்களில் டிரண்டியாக உள்ள ஒரு Fashion, அதிகம் நாம பார்க்க முடிகிற ஒரு காரியம், low hipல் தாங்கள் அணிந்துள்ள உள்ளாடைகள் தெரிகிற மாதிரி டிரெஸ் பண்ணுகிற ஒரு கலாச்சாரம். அதனுடைய உண்மை தன்மையை அறிந்தால் அது வெட்கக்கேடான ஒரு காரியம்.

இந்தக் காரியம் எங்கு ஆரம்பித்தது என்றால் சிறைச்சாலையில். சிறைச்சாலையில் உள்ள கைதி, தான் ஒரு தன்பாலின ஈர்ப்பாளர் என்பதை வெளிப்படுத்துவதற்காகச் சிறைசாலை வஸ்திரத்தை அப்படி உடுத்துவான். அப்படி உடை உடுத்தியிருந்தால் அந்தக் கைதி ஒரு தன்பால் ஈர்ப்பாளர் என்பதை மற்ற கைதிகள் அறிந்து கொள்வார்கள். மேலும் அதே நோக்கத்தோடு இருக்கிறவர்கள் அந்தப் பாவத்தில் ஈடுபடுவார்கள்.

அந்தக் கலாச்சாரம் கொஞ்சம் கொஞ்சமாக சமுதாயத்திற்குள் வந்தது. தற்போது உலகம் முழுவதும் தீவிரமாய் பரவிக் கொண்டிருக்கிற ஒரு காரியம் LGBTQ. எந்தத் தேசத்தை எடுத்தாலும் இந்தக் காரியம் அதிகமாகக் காணப்படுகிறது. இதில் அதிகம் பாதிக்கப்படுவது இளைஞர்கள் மற்றும் வாலிபர்கள். தற்போது இந்தப் பாவமானது பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்குள்ளாகக் கடந்து வந்திருக்கிறது.

இன்னும் ஒரு படி மேலாகச் சென்றோம் என்றால் இந்தப் பாவத்தைத் துணிகரமாகச் செய்வதற்கு தங்களுடைய பாலினத்தை மாற்றிக் கொள்ளுகிற இளைஞர்கள் அதிகம். எனக்குப் பிரியமான வாலிப சகோதரனே சகோதரியே, இந்தப் பாவம் மிகவும் கொடூரமானது. ஏன் இவ்வளவு நாள் இல்லாத இந்தக் காரியம் இப்பொழுது பரவுகிறது என்றால், அந்திக்கிறிஸ்து எழுப்புதலை மட்டுப்படுத்தவும், தன்னுடைய ஆட்சியை முன்னாகக் கொண்டு வரவும் எத்தனிக்கிறான்.

அவன் ஒரு தன்பால் ஈர்ப்பாளன். ஆகவே உலகம் முழுவதும் தன்னை அங்கீகரிப்பதற்காக இந்த நடைமுறையைக் கொண்டு வருகிறான். உலகம் முழுவதும் இருக்கிற அனைத்து நாடுகளும் அதை அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காகப் பரவச் செய்கிறான். இன்னும் கூறப்போனால் இந்தக் காரியத்தை அவன் இஸ்ரவேல் தேசத்தில் ஆரம்பித்தான். இஸ்ரவேல் தேசத்தில் ஒவ்வொரு ஆண்டும் இந்தத் தன்பால் ஈர்ப்பாளர்களுக்கு என்று தனியாக Pride Parade நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எனக்குப் பிரியமான வாலிப சகோதரனே சகோதரியே ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்; இந்தப் பாவத்தில் ஈடுபடுகிற ஒருவர் கூடப் பரலோகத்துக்கு போக முடியாது என வேதத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. மற்றொரு காரியம் நம்மைப் படைத்தவராகிய தேவனை கேவலப்படுத்துவதற்காகவும், தேவ கோபாக்கினையை துாண்டுவதற்காகவும் பிசாசினால் உருவாக்கப்பட்டது இந்தப் பாவம்.

எனக்குப் பிரியமான வாலிப சகோதரனே சகோதரியே இந்த நாட்களில் ட்ரெண்டாயிருக்கிற இந்தக் காரியம் தேவனுடைய ராஜ்ஜியம் தேசத்தில் வரவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. ஒருவேளை உனக்குள் இந்தத் தவறான எண்ணங்கள் வந்து கொண்டிருக்குமே யானால் அதைத் தடுப்பதற்கு முயற்சி எடு. பரிசுத்த ஆவியானவர் எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு. இப்பேற்பட்ட பாவப் போராட்டத்திலிருந்து நீ விடுவிக்கப்பட வேண்டும் என்றால் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிற அந்தப் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும்.

**அன்பான சகோதரனே சகோதரியே உன் கையில் தான் பொறுப்பு இருக்கிறது, நீதான் இந்தப் பாவத்தைத் தேசத்தை விட்டுத் துரத்த வேண்டும். இந்தப் பாவம் நம் தேசத்தில் பரவாதபடிக்கு கர்த்தருக்குள் முழு தீர்மானத்தோடு, No LGBTQ என்கிற டிரெண்டை உருவாக்குவோம். எழுப்புதலுக்கு நாம் வழிவாசல்களை உண்டு பண்ணுவோம்.**

- இத்துடன் நிறைவு பெறுகிறது.



# தாராளமாய் கொடு!!

முகப்பு செய்தி: காலேப்

கிறிஸ்மஸ் காலம் என்றாலே மிகவும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நமக்கு உண்டாகும். அந்த வருடம் கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் எல்லாரும் பண்டிகையின் நாட்களைக் கொண்டாட ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அலெக்ஸிற்கும் குடும்பத்தினருக்கும் கிறிஸ்மஸ் நாட்களுக்கான எந்தவிதமான உற்சாகமும் காணப்படவில்லை. ஏனென்றால் அந்த ஆண்டு அவர்களுக்குப் பொருளாதார நிலை சரியில்லை. ஒவ்வொரு மாதமும் கடன் இல்லாமல் கடப்பதே மிகுந்த சிரமமாக இருந்தது. அந்த வருடம் கிறிஸ்துமஸ் எப்படி கொண்டாடுவது என்ற பல சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தது. ஆனாலும் பிள்ளைகளின் ஆசைக்காகக் கிறிஸ்மஸ் மரத்தை வைத்து மின்விளக்குகளால் அலங்கரித்தார்கள். குழந்தைகள்





பலவித கனவுகளோடு, என்னென்ன பரிசுகள் வேண்டும் என்ற பட்டியல்களைத் தயாரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து இன்னும் வேதனையாக இருந்தது.

கிறிஸ்மஸ் நெருங்க நெருங்கக் கவலையும் சோர்வும் அலெக்ஸை சூழ்ந்து கொண்டது. கிறிஸ்மஸிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவர்கள் வெளியே சென்று வீடு திரும்பும்போது, இவர்கள் ஆச்சரியப்படும் விதமாக வீட்டுக்கு முன்பாகப் பல பரிசுப் பெட்டிகள் அடுக்கப்பட்டிருப்பதை அலெக்ஸும் அவன் குடும்பமும் கண்டு பிரமித்தனர். அதை எண்ணிப் பார்க்கையில் குடும்பத்திலிருந்த ஒவ்வொரு நபருக்கும் இரண்டு பரிசுகள் வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்தவுடன் முழு குடும்பத்திற்கும் சந்தோஷமும், கிறிஸ்துமஸ் பண்டிகையின்

உற்சாகமும் மிகுதியாய் உண்டானது. ஆனால் அதை யார் கொடுத்தது? எங்கிருந்து வந்தது? என்ற விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை அலெக்ஸ் தன் குடும்பத்தோடு சந்தோஷமாகக் கொண்டாடினார்.


கிறிஸ்மஸ் பண்டிகை என்றாலே புத்தாடைகள், பரிசுப்பொருட்கள், வீட்டை அலங்கரிப்பது மற்றும் விதவிதமான உணவைச் சமைத்து உண்டு மகிழ்வது தான் நம் நினைவிற்கு வரும். அது தவறல்ல, ஆனால் கிறிஸ்மஸின் உண்மையான சந்தோஷம் பெறுவதில் அல்ல, மற்றவர்களுக்குக் கொடுப்பதில் தான் உள்ளது. **பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரேப்பேறான குமாரனை நமது பாவங்களுக்காக மரிக்கவும், இரட்சிப்பை அடையவும் இந்த உலகத்திற்கு அனுப்பி இவ்வளவாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்தார்** என்று யோவான் 3:16ல் வாசிக்கிறோம்.

## இந்தக் கிறிஸ்மஸ் காலங்களில் இயேசுவின் அன்பை எப்படிப் பிறருக்கு வெளிப்படுத்தலாம்?



### நன்மை செய்யுங்கள்

நாம் சந்தோஷமாகப் பண்டிகையை ஆசரிக்கும் இந்தக் காலங்களில், பலவித தேவைகளோடு இருக்கும் மக்கள் நம் அருகிலேயே இருக்கிறார்கள். நீங்கள் இருக்கும் பகுதியில் உங்கள் அருகாமையில் கூட அவர்கள் இருக்கலாம். அப்படிப்பட்ட நபர்களைக் கண்டுபிடித்து உதவி செய்யலாம். நம்மைவிட பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு, ஒருவேளை நல்ல உணவுக் கொடுத்து அவர்களை மகிழ்விக்கலாம். ஆதரவற்றிருக்கும் குழந்தைகளுக்கு ஒரு பரிசைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்தலாம். மத்தேயு 5:16, "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கப்படக்கடவது". இப்படி நாம் நற்கிரியைகள் செய்வதன் மூலம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தலாம். நாம் செய்யும் ஒரு சின்னக் காரியம் கூட அநேகருடைய வாழ்க்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். 1 தீமோத்தேயு 6:18ல் "நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐஸ்வரியவான்களாகவும், தாராளமாய் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும்..." வேண்டும் என்று பவுல் தீமோத்தேயுவிற்கு கட்டளையிடுகிறார். உலக மக்களைப் போலவும், அறியாதவர்களைப் போலவும், நாம் பெருமைக்காகவும், புகழுக்காகவும் செய்யாமல் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த நன்மை செய்வோம்.



### சுவிசேஷம் அறிவியுங்கள்

சுவிசேஷம் அறிவிப்பதற்கு கிறிஸ்மஸ் காலத்தைவிட ஒரு சிறந்த வாய்ப்பு நமக்கு இருக்க முடியாது. இயேசுவை அறியாத பல ஆயிர ஜனங்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பண்டிகை நாட்களில் இனிப்புகளையோ அல்லது வெகுமதிகளையோ அளித்து இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கலாம். நாம் விதைக்கும் சுவிசேஷ விதை நிச்சயம் ஒருநாள் பலன் தந்து, நீங்கள் சுவிசேஷம் அறிவித்த அந்த நபர் இரட்சிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. "சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாகத் திருவசனத்தை பிரசங்கம்பண்ணு" (2 தீமோ. 4:2). நமக்குக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்க நம்மை அர்ப்பணிப்போம். "நமக்குக் கிடைத்த விலையேறப்பெற்ற பரிசாகிய இயேசுவை அநேகருக்குப் பகிர்ந்து, அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவோம்".

அன்பான வாலிபர்களே! இந்தக் கிறிஸ்மஸ் நாட்களில் நன்மை செய்வதோடு, சுவிசேஷம் அறிவித்து, தேவ இராஜ்ஜியத்தில் அநேகரை சேர்க்கப் பிரயாசப்படுங்கள். கிறிஸ்து பிறப்பின் நன்மையைப் பெற்ற நீங்கள் மற்றவர்களுக்கும் கொடுத்து இந்தக் கிறிஸ்துமஸ் தினத்தைச் சந்தோஷமாகக் கொண்டாடுங்கள்!

# நான் ஒரு ஜெபவீரன்

கடந்த 11 மாதங்களாகப் பலவிதமான ஜெபங்களைப் பற்றியும், அந்த ஜெபங்கள் எதற்காக ஏறெடுக்கப்பட்டது என்றும் பார்த்தோம். இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் வந்திருக்கும் நாம், இந்த 12 மாதங்களும் கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்குக் கோடி நன்றி சொன்னாலும் தகாது. இந்த மாதம் நன்றி ஜெபம் என்ற தலைப்பில் சில காரியங்களை நாம் பார்க்கப் போகிறோம்.




தேவன் நமக்குச் செய்த உதவிகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் அன்பிற்காகவும் நன்றி தெரிவிப்பது தான் நன்றி செலுத்தும் ஜெபமாகும்.

நாம் யாருக்காவது ஒரு நன்மை செய்யும்போது அவர்கள் நமக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையானது. ஆனால் அவர்கள் நன்றி எதுவும் சொல்லாமல் போய் விட்டால், அது நமக்கு வருத்தம் அளிப்பது போலவே, தேவனையும் வருந்தச்செய்யும். தேவன் செய்த நன்மைகளை மறவாதபடிக்கு நன்றியறிதலுள்ளவர்களாய் நாம் இருப்பது அவசியம்.


## வேதத்தில் நன்றி ஜெபம் செய்தவர்கள்...

**தாவீது:** பல சங்கீதங்களில் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறார் (சங். 107:1-3).

**ஏசாயா:** 12ஆம் அதிகாரத்தில் நன்றி செலுத்தும் பாடலைப் பாடுகிறார்.


**பவுல்:** பவுல் கொலோசெயர் 4:2-இல், ''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்'' என்று அறிவுறுத்துகிறார். மேலும் கொலோசெயர் 3:17-இல், ''வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்'' என்று கூறுகிறார்.

**இஸ்ரவேலர்கள்:** பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலர்கள் கர்த்தரின் செயல்களுக்கு நன்றி தெரிவித்து ஜெபம் செய்தார்கள். உதாரணமாக, சங்கீதம் 107-இல், இஸ்ரவேலர்கள் தங்கள் விடுதலையைப் பற்றி நன்றி செலுத்தி கடவுளைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள்.



**அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்** (லூக்கா 17:17-19).

அக்காலத்தில் குஷ்டரோகிகள் வீட்டைவிட்டு, ஊரைவிட்டு ஒதுங்கியே இருக்க வேண்டும். குஷ்டரோகத்திற்கு மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்கள் குணமானால் முதலில் ஆசாரியரிடத்தில் சென்று தங்களைக் காண்பித்து, குணமானதை உறுதிப்படுத்திய பின்புதான் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் தான் இந்தப் பத்து குஷ்டரோகிகளும் தூரத்தில் நின்று, ‘‘ஐயரே எங்களுக்கு இரங்கும்’’ என்று சத்தமிட்டுக் கூப்பிடுகிறார்கள். இயேசு, எதுவும் செய்யாமல், ‘‘நீங்கள் போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பியுங்கள்’’ என்று சொன்னார். அவர்களும் நம்பிப்போனார்கள். போகும் வழியிலேயே அவர்கள் சுத்தமானார்கள். சுகமடைந்த ஒன்பது பேரும் ஆசாரியருக்குத் தங்களைக் காட்டிவிட்டுப் போய்விட்டனர். ஆனால் அதில் ஒருவன் மாத்திரம், இயேசுவிடம் திரும்பி வந்து, உரத்த சத்தமிட்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினான்.



அந்த ஒன்பது பேரும், இயேசு போகச் சொன்னார் என்று நினைத்துப் போயிருந்திருக்கலாம்; அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற எண்ணமே வரவில்லை. இவர்களைப் போலத் தேவைக்கு, ‘ஆண்டவரே’ என்று கதறியழுது, பின்னர் அவரைவிட்டு விலகித் தூரமாய்ப்போன நேரங்கள் நமது வாழ்விலும் வந்திருக்கலாம். நீங்கள் தேவன் செய்த கணக்கில்லா நன்மைகளை மறந்துபோன நாட்கள் உண்டா? தேவ பாதத்துக்குத் திரும்புவோம். அவர் பாதத்தில் விழுந்து மனதார நன்றி பலிகளை செலுத்துவோம். சுகமான மற்ற ஒன்பது பேரையும் இயேசு தேடினதுபோல, தமது இரத்தத்தையே சிந்தி மீட்டுக் கொண்டநம்மை இன்றும் அவர் தேடிக்கொண்டிருக்கிறார். நன்றி மறவாமல் அந்த நல்ல தேவனையே நோக்கிப் பார்ப்போம்.

இந்த வருடத்தின் கடைசிக்கு வந்துவிட்டோம். இந்த வருடம் முழுவதும் கர்த்தர் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் செய்த நன்மைகளை நினைத்துக் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும். என் பெலத்தினால் நான் சம்பாதித்தேன், என் ஞானத்தினால் இந்தக் காரியங்களைச் செய்தேன், அதற்கு எதற்குக் கர்த்தருக்கு நன்றி என்று நினைக்கிறீர்களா? ‘‘நாம் நிற்பதும் நிர்மூலமாகாததும் தேவனுடைய சுத்த கிருபையே. நாம் உயிரோடிருப்பது அவருடைய கிருபையினால் மாத்திரமே என்பதை மறந்து போக வேண்டாம்.

இன்று, நாம் தேவன் செய்த நன்மைகளை மறப்பதினால்தான், வீண் பெருமை, அகந்தை நம்மை ஆட்கொள்கிறது. அன்றைக்கு நாம் இருந்த நிலைமையில் இன்றைக்கு இல்லை. கர்த்தர் நம்மை உயர்த்தியிருக்கிறார். நாம் இருந்த பழைய நிலையை மறக்கும்போதுதான், மற்றவர்களைக் காட்டிலும் நான் உயர்ந்தவன் என்று நம் மனம் பெருமை கொள்கிறது. ஆகையால் நாம் ஜெபிக்கும்போது, இயேசுவே நீர் செய்த நன்மைகளை மறவாதிருக்கும் நன்றியுள்ள இருதயத்தை எனக்குத் தாரும் என்று ஜெபிக்க வேண்டும்.

*அன்பான வாலிபர்களே!*

*நன்றி உள்ளவர்களாக இருங்கள். தேவன் உங்களிடம் வெறும் நன்றியை மட்டுமே எதிர்பார்க்கிறார். ஒவ்வொன்றுக்கும் நன்றி செலுத்துங்கள். உங்கள் எல்லா ஜெபத்திற்கும் தேவன் பதில் கொடுப்பார். தேவன் உங்களோடிருப்பாராக!!*

*- இத்துடன் முற்றும்.*

தகவல்: மோசஸ்



# ஆசரிப்பு கூடாரம்


ஆசரிப்பு கூடாரம், பரலோக ஆராதனை மாதிரியாகவும், இயேசு கிறிஸ்துவின் தன்மைகளையும், கிறிஸ்தவ வாழ்க்கையின் படிநிலைகளையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**கூடாரம்: (தற்காலிக அமைப்பு):** ஆசரிப்பு கூடாரம் (மிஷ்க்கான்) என்பது நம்மோடு கூட இன்னொருவர் வாசம் பண்ணுவது போலத் தேவன் மக்கள் மத்தியில் வாசம் பண்ணுவதைக் குறிக்கிறது. தேவன், மனிதர்கள் கூடாரத்தில் தங்கி வசித்தது போலவே தானும் கூடாரத்தில் வாசம்பண்ண விரும்பினார். இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து கொண்டுவந்து கானான் தேசத்தைப் பங்கிட்டுக் கொடுத்துச் சபையைக் கட்டியபின் தான் நான் ஜனங்களோடு இருப்பேன் என்று எண்ணாமல், எகிப்திலிருந்து வந்த வனாந்திர பாதையிலே ஜனங்களோடு வாசம் பண்ணினார். அதுபோலப் பரலோகத்திற்கு நாம் அவரிடத்திற்கு செல்லும் வரை காத்திருக்காமல் பூமியிலே நம்மோடு வாசம்பண்ண விரும்புகிறார்.

ஆசரிப்பு கூடாரத்திற்கு ஒரே ஒரு நுழைவாசல் தான் உண்டு. பரலோகம் போக ஒரே வழி இயேசு மட்டுமே (யோவான் 14:6). பரலோகத்திற்குள் நுழைய ஒரே வாசல் இயேசு (யோவான் 10:9). சூரியன் உதிக்கிற திசைக்கு எதிரே ஆசரிப்பு கூடார வாசல் காணப்படும். ஆகவே ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசிக்கும் ஒருவர் சூரியனுக்கு தன் முதுகைக் காண்பித்து நுழைவதன் மூலம் சூரியனை வழிபடும் காரியத்தை எதிர்ப்பதை குறிக்கும். (அந்நாட்களில் எகிப்தியர் சூரியனை வழிபட்டனர்).



**கிருபாதார பலி:** ஆசரிப்பு கூடாரத்தில் பிரதானமாகச் செலுத்தப்பட்ட 5 பலிகள்; சர்வாங்க தகனபலி, போஜனபலி, சமாதான பலி, பாவநிவாரண



பலி மற்றும் குற்றநிவாரண பலி. இந்த ஐந்து பலிகளையும் உள்ளடக்கியது கிருபாதாரபலி. இயேசு நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார் (1 யோவான் 4:10).

**ஆசரிப்பு கூடாரம்:** யாத்திராகமம் 36:7, செய்யவேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருந்தது. கர்த்தர் ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னால், அதன் தேவைக்கும் அதிகமானதைக் கொடுத்து ஆசீர்வதிப்பார். கர்த்தர் சொன்னபடி நம் படிப்பு, வேலை, business, ஊழியம், குடும்பம் மற்றும் எதிர்காலத்தை அமைத்துக் கொண்டால், குறைவின்றி நம்மை நடத்துவார்.

தேவன் காண்பித்த மாதிரியின்படியே, ஆசரிப்பு கூடாரம் கட்டப்பட்டது. மோசே 40 வயதாக இருக்கும்போது, இந்த மாதிரி கொடுக்கப்பட்டிருந்தால் தன்னுடைய எகிப்தின் ஞானத்தின்படி கட்டியிருப்பார். எகிப்தின் பிரம்மாண்டமானப் பிரமிடுகளையும் அவைகளின் கட்டிட அமைப்புகளையும் மோசே கண்டிருந்தும், தேவன் சொன்னபடியே செய்தார். தேவன் சொன்னதை அவர் விரும்புகிறபடி செய்ய வேண்டும். வேத வசனத்தை, அவர் சொன்னதை நமக்கு ஏற்றபடி மாற்றி அமைக்கக் கூடாது.



**பெசலெயேல்:** யாத்திராகமம் 31:5, **சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனைத் தேவ ஆவியினால் நிரப்பினேன்.** விநோதமான வேலைகளையும் யோசித்து, சகலவித வேலைகளையும் யூகித்து செய்கிறவர். பெசலெயேல் என்றால் ''தேவனுடைய நிழலில்'' என்று பொருள். சர்வ வல்லவருடைய நிழலில் நாம் இருக்கும்போது, அவர் நம்மையும் விசேஷமாய் பயன்படுத்துவார்.

யாத்திராகமம் 36:2, **பெசலெயேலையும் அகோலியாபையும், கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலைகளைச் செய்யவரும்படி தங்கள் இருதயத்தில் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தாராகிய எல்லாரையும், மோசே வரவழைத்தான்.** ஆசரிப்பு கூடாரம் கட்டவும், அதற்குத் தேவையான வேலைகளைச் செய்யவும் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தார் தேவைப்பட்டனர். இந்தக் கடைசி காலத்தில் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டவும், ஜனங்களை வருகைக்கு ஆயத்தப்படுத்தி, எழுப்புதல் தீயை எங்கும் பரவச் செய்யவும் நீங்கள் தேவனுக்குத் தேவை. இணைவோம், எழுப்புதல் தீயை பரவச் செய்வோம்!

# மவுண்ட் சீனாய்

## (ஒருநாள் வாலிபர் உபவாச கூடுகை)



கடைசிகால எழுப்புதலில் வாலிபர்கள் தேசத்திற்காக ஜெபிக்கிறவர்களாகவும், அழிந்துக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களை சுவிசேஷம் அறிவிக்கிற சேனைகளாக எழும்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டு, கடந்த 15 ஆண்டுகளாகத் தீபாவளி தினத்தன்று மவுண்ட் சீனாய் வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச ஜெபம் பல இடங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த வருடமும் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி மற்றும் மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள 33 இடங்களில் மவுண்ட் சீனாய் கூடுகையை நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் 6500 பேர் ஒருநாள் முழுவதும் உபவாசத்தோடு ஜெபிக்கக் கூடி வந்தார்கள்.

வாலிபர்கள் எலியாவைப் போல் எழும்ப வேண்டும் என்று ''எலியாவே எழும்பு, உன் வல்லமையைத் தரித்துக்கொள்'' என்கிற தலைப்பின் கீழ் முதல் பகுதியில் எலியாக்களைப் போல் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறவர்களாக இருக்கவும், இரண்டாவது பகுதியில் கர்த்தருக்காக வல்லமை வரங்களோடும் செயல்படுவதின் அவசியத்தை குறித்து செய்தி கொடுக்க ஊழியர்களைத் தேவன் பயன்படுத்தினார்.

நாலுமாவடியில் சகோதரர் மோகன் சி. லாசரஸ் மற்றும் சகோதரி ஆஷ்லியை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். தேசத்திற்காகத் திறப்பிலே நின்று ஜெபிக்கவும், சுவிசேஷம் அறிவிக்கவும், தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களில் ஈடுபடமாட்டேன் என்றும், எழுப்புதலுக்காகத் தீவிரமாகப் பிரயாசப்படவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர்.






































வாலிபனே!

# மவுண்ட் சீனாய்




















# எழுப்புதலின் விதைகள்!



## ஜான் பேட்டன்

மிஷனெரி பயணம்: வில்லியம்

**கடந்த மாதம் திரு. அலெக்சாண்டர் டப் அவர்களுடைய மிஷனெரிப் பணியைக் குறித்துப் பார்த்தோம். இந்த மாதம் மிகவும் ஆபத்தான காட்டுமிராண்டிகள் வாழும் தீவில், பயங்கர ஆயுதங்களோடு மிருகத்தனமாகத் தன்னைத் தாக்க வந்த மிலேச்சர்கள் நடுவில் தைரியமாய் நின்று, அன்பும் இரக்கமும் காட்டி தன் உயிர் போனாலும் போகட்டும் என்று எதற்கும் பயப்படாமல் ஆண்டவரின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்த மிஷனெரியின் வாழ்க்கையைப் பார்ப்போம்.**

**ஜான் பேட்டன்** 1824ஆம் ஆண்டு, ஸ்காட்லாந்தில் பிறந்தார். அவர் சிறுவனாயிருந்தபோது அவர்களுடைய வீட்டில் ''பரிசுத்த ஸ்தலம்'' என்று அழைக்கப்படும் ஓர் அறை இருக்கும். அந்த அறைக்குள் ஜானின் தகப்பன் ஒருநாளில் 3 முறை ஜெபிப்பார். தகப்பனின் ஜெபவாழ்க்கை ஜானுக்கு சவாலாக அமைந்தது. ஜான் கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தான் ஒரு நற்செய்திப் பணியாளனாக வேண்டும் என்று ஆவல் கொண்டார்.

கிளாஸ்கோ நகரத்தில் இறையியல் கல்லூரியில் சேர்ந்து படித்தார். அங்குள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணி செய்தார். தாழ்த்தப்பட்டோருக்காகச் சேவை செய்யும் கிளாஸ்கோ நகர மிஷனெரி ஸ்தாபனத்தில் இணைந்து, பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே அவரது ஊழியத்தின் பலனைப் பார்க்க முடிந்தது. அநேக குடிகாரர்கள், வேலையற்று சோம்பலாய் இருந்தவர்கள், கடவுளைச் சபிக்கிறவர்கள் எனப் பலரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தினார். இத்தனை உழைப்பின் மத்தியிலும் தன் கல்லூரிப் படிப்பையும் தொடர்ந்து படித்து வந்தார்.

அழிந்து கொண்டிருக்கும் ஜனங்களுக்கு ஆண்டவரின் பணி செய்ய யாருமே போக ஒப்புக் கொடுக்காததால், ''நீயே எழுந்து உன்னை அர்ப்பணி'' என்ற தேவனின் தூண்டுதலை ஏற்று, தனது 34வது வயதில் (1858ஆம் ஆண்டு) ஜான் தன் மனைவியுடன் நியூஹெப்ரிட்ஸ் செல்லக் கப்பல் ஏறி, நீண்ட பயணத்துக்குப் பின் மிகவும் ஆபத்தான காட்டுமிராண்டிகள் வாழ்ந்த டான்னா தீவிற்கு சென்றார்கள். ஆபத்து நிறைந்த இந்த இடத்தில்தான் நற்செய்திக்கு அதிக தேவை இருந்தது என்று உணர்ந்து, முதலாவது அந்த மக்களின் மொழியைக் கற்றுக்கொண்டு, வேதாகமத்தை மொழிபெயர்த்து அவர்களுக்கு வாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் ஜான் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. கொஞ்சக் காலத்துக்குள் அவருடைய மனைவி மலேரியாவினால் மரணமடைந்தார். 2 வாரத்துக்குப் பின் அவருடைய சிறிய மகனும் இறந்துவிட்டான். எனினும் ஜான் மனம் தளராமல் அந்தத் தீவில் ஊழியம் செய்வதற்காகவே தேவன் அவரை அங்கே அனுப்பியிருப்பதாக நம்பினார். மனைவியையும், மகனையும் இழந்து தனி மரமாக நின்றபோதிலும் அவரால் தன்னுடைய ஊழியத்தை விட முடியவில்லை.

அத்தீவு மக்கள் பேய்களையும் முன்னோர்களின் ஆவிகளையும் வணங்கி வந்தனர். இயற்கை மரணம்

உண்டு என்பதையே அறியாதிருந்தனர். அந்தக் கிராமத்தில் யார் இறந்தாலும், ''உன்னுடைய கடவுள்தான் இந்தச் சாவுக்குக் காரணம், அதனால் உன்னைக் கொல்லப் போகிறோம்'' என்று ஜான் மீது பழி சுமத்தினார்கள். அத்தீவு மக்கள் நற்செய்தியை ஏற்றுக்கொண்டால், தங்களுடைய சகல ஆதிக்கமும் அழிந்துவிடும் என்று அங்குள்ள மந்திரவாதிகள் அறிந்து, இயற்கையின் சீற்றமும் இன்னல்களும் நேரும்போது, அதற்கு மிஷனெரிகளே காரணம் என்று சொல்லி அவர்களைக் கொலை செய்ய முற்பட்டனர்.

ஜான் பேட்டனுடைய ஊழியம் ஆபத்துக்களும் துன்பங்களும் நிறைந்ததாக இருந்தது. அவருக்கு அடிக்கடி பயமுறுத்தல்கள் வந்தன. நான்கு வருடங்கள் துன்பங்களை அனுபவித்துக்கொண்டே ஊழியம் செய்தபின், ஓய்வுக்காக ஸ்காட்லாந்துக்குத் திரும்பிச் சென்றார். அங்குப் பல ஆலயங்களுக்குச் சென்று நற்செய்தி அறிவித்துத் தன் பணித்தளத்தின் தேவைகளை எடுத்துச் சொன்னபோது, நான்கு இளைஞர்கள் அந்தத் தீவில் மிஷனெரியாக ஊழியம் செய்யத் தங்களை அர்ப்பணித்தனர்.



## அனீவா தீவில் ஊழியம்

1865 ஜனவரியில் பேட்டன், டான்னாவுக்கு அருகில் உள்ள அனீவா தீவிற்கு சென்றபோது, அங்கும் பல ஆபத்துக்கள், துன்பங்கள் அவருக்கு ஏற்பட்டது. இந்தத் தீவிலும் பேட்டன் அங்குள்ள மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டியதிருந்தது. டான்னாவில் அவர் கையாண்ட முறைகளை இங்கும் கையாண்டு நற்செய்தி ஊழியத்தை அந்தத் தீவுகள் எங்கும் செய்தார்கள். ஏராளமான மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இவர்களுடைய ஊழியத்துக்கு எதிரிகளும் இயற்கைச் சீற்றங்களும் இடையூறாக இருந்தது. குளிக்கவும், குடிக்கவும், துணி துவைக்கவும் நல்ல தண்ணீர் வசதியில்லாத ஒரு தீவாக இருந்ததால், பேட்டன் ஒரு கிணறு தோண்ட ஆரம்பித்தார், அந்தக் கிராமத்து மக்கள், ''தண்ணீர், மழை மூலம் வானத்திலிருந்து வரும்; இவர் மண்ணைத் தோண்டுகிறாரே, இவருக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது'' என்று இவரைப் பார்த்துச் சிரித்தார்கள்.

பேட்டன் முழு நம்பிக்கையுடனும் ஜெபத்துடனும் வெகு ஆழம் தோண்டியபின், ஒருநாள் மண் ஈரமாய் இருப்பதைப் பார்த்து, கிராம மக்கள் அனைவரையும் கிணற்றருகே கூடி வரச்செய்து, தண்ணீரை எடுத்து மக்களிடம் காட்டினபோது, மக்கள் அனைவரும், ''ஆஹா... இது என்ன ஆச்சரியம்! மண்ணின் ஆழத்திலிருந்து மழை வருகிறதே!'' என்றார்கள்.

அவர்கள் பேட்டனிடம், ''இது எப்படி வந்தது?'' என்றார்கள். அப்பொழுது அவர், ''நமக்குத் தண்ணீர் இல்லை அல்லவா? அதற்காக நான் கடவுளிடம் வேண்டினேன். கடவுள்தான் இந்தத் தண்ணீரைத் தந்தார்'' என்றார். தீவுத்தலைவன் ஆச்சரியத்தில் மூழ்கினவனாய் ''யேகோவாவே உண்மையான தெய்வம்'' என்று ஆரவாரித்தான். இவர் பலகாலம் செய்த நற்செய்திப் பிரசங்கங்களைவிட அதிக சாதனையை இந்தக் கிணறு செய்தது. ஏராளமான மக்கள் கர்த்தர் மேல் நம்பிக்கைக் கொண்டு இயேசுவின் பிள்ளைகளானார்கள். மழை இல்லாதபோது ஜனங்கள் கிணற்று நீரைக் குடித்து உயிர் வாழ்ந்தார்கள்.

1899ஆம் ஆண்டு அனீவா மொழியில் புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளுடன் தேவனை ஆராதிக்க ஆலயம் தேவை என்பதை உணர்ந்து அனைவரும் சேர்ந்து உற்சாகமாக ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்பினார்கள். அனீவா மக்களின் மொழியிலேயே ஒரு பாட்டுப் புத்தகத்தைத் தொகுத்து அச்சிட்டு வழங்கினார். 2 அநாதை விடுதிகளைக் கட்டினார். இங்குப் படித்து, வளர்ந்த அநேகர், பின்னாளில் ஆசிரியர்களாகவும் நற்செய்தி ஊழியர்களாகவும் மாறினார்கள்.

**எவ்வளவு இன்னல்கள் வந்தாலும் அழைத்தவர் உண்மையுள்ளவர், அவருடைய கரம் என்னை நடத்தும் என்னைக் கைவிடமாட்டார் என்று அவரை நம்பி இருந்ததால் அவரது அயராத உழைப்பின் பயனாக ஏராளமான மக்கள் இன்றும் கிறிஸ்துவை வணங்கிப் போற்றுகிறார்கள். நாமும் இயேசுவுக்காக அவர் இராஜ்ஜியத்திற்காக ஜான் பேட்டனைப் போல் முழுமையாக அர்ப்பணிப்போம்.**

சாதனை: சுமா கிரேஷன்

# வீழ்ச்சியிலிருந்து வெற்றிக்குப் பயணம்!!



அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்!

இந்த உலகத்தில் நம்மால் முடியாது என்று ஒன்றும் இல்லை. ஆனால் நம்மில் பலர் ஒரு செயலைத் தொடங்கியவுடன், தோல்வியோ அல்லது போராட்டங்களோ வரும்போது, 'இனி என்னால் முடியாது' என்று சொல்லி வெற்றியை விட்டுப் பின் வாங்குகின்றனர். ஆனால் அதற்கு மாறாகத் 'தோல்வியோ, போராட்டங்களோ என்னை என்ன செய்யப் போகிறது' என்று எண்ணி துணிச்சலோடு நம் செயலில் கவனம் செலுத்தினால், வெற்றி நம்மைத் தேடி வரும். அப்படி முடியாததை முடியும் என்று நினைத்து சாதித்த சாதனையாளரின் வாழ்க்கை பயணம் உங்களுக்காக...






ஏக்தா பியான் **(Ekta Bhyan)** 1985ம் ஆண்டு இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் பிறந்தார். மற்ற பிள்ளைகளைப் போலவே படிப்பிலும் விளையாட்டிலும் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார். 2003ஆம் ஆண்டு தன்னுடைய 17வது வயதில் ஏற்பட்ட ஒரு பேருந்து விபத்தில் அவரது முதுகுத்தண்டில் பலத்த காயங்கள் ஏற்பட்டு, அவரால் இனி நடக்க முடியாது, வாழ்நாள் முழுவதும் வீல் சேரில் தான் கழிக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியது. இது அவருடைய வாழ்க்கையில் பெரிய திருப்பத்தை கொண்டு வந்தது. 'மற்றவர்களைப் போல இனி என்னால் நடக்க முடியாது; என்னால் ஒன்றுமே செய்ய முடியாது' என்று எண்ணி சோர்ந்து போகாமல், மகிழ்ச்சியுடன் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்கினார்.

ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டம் பெற்று 2011ஆம் ஆண்டு ஹரியானா சிவில் சேவைகள் தேர்வில் வெற்றிப் பெற்றார். தற்போது மாநில அரசு வேலைவாய்ப்புத் துறையில் உதவி இயக்குனராக பணியாற்றி வருகிறார். 2014 ஆம் ஆண்டு விளையாட்டு துறையில் கால் பதிக்க தொடங்கினார். கிளப் எறிதல் மற்றும் தட்டெறிதல் போன்ற விளையாட்டுகளில் பயிற்சி பெற்றார். 2016 ஆம் ஆண்டு பெர்லினில் நடைபெற்ற ஐபிசி கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் கிளப் எறிதல் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்றார்.

2018ஆம் ஆண்டு ஜெகார்தாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுகளில் தங்கப்பதக்கம் வென்றார். இந்த ஆண்டு 2025 டெல்லியில் நடைபெற்ற உலக பாரா தடகளப் போட்டியில், கிளப் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்றார். இது அவரது ஒன்பதாவது சர்வதேச பதக்கம் ஆகும். 2018 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிக்கான தேசிய விருதில், 'மாதிரியான நபர்' என்ற விருதைப் பெற்றார்.



இதை வாசிக்கும் நண்பர்களே, ஏக்தாவின் வாழ்க்கை ஒரு விபத்தில் முழுவதும் மாறிப்போனது. ஆனால் 'என்னால் முடியாது' என்று அவர் முடங்கி இருந்திருந்தால், இன்று நாம் அவரைப் பற்றி அறிந்திருக்க முடியாது. எது வந்தாலும் என்னால் எதிர்கொள்ள முடியும் என்ற எண்ணம் தான் அவரை வெற்றிப் பாதைக்கு வழி வகுத்தது. இன்று நீங்கள் எடுக்கப் போகும் முடிவு என்ன?? முடியும் அல்லது முடியாது... விடை உங்களிடம்...!






கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்

Hi friends. எல்லாரும் எப்படி இருக்கீங்க? கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும் இந்த மாதத்திலும் உங்களை சந்திப்பது எனக்கு மிகுந்த சந்தோஷம்!

சரி வாங்க... நாம் தொடருக்குள் போகலாம்.

வேதாகமத்தில் இயேசு கலிலேயாக் கடலைக் கடந்து கடலின் அந்தப் பக்கத்தில் உள்ள தெக்கப்பொலி என்ற நாட்டிற்கு வந்தார் என்று வாசிக்கிறோம். இயேசு படகிலிருந்து இறங்கியவுடன் ஆயிரக்கணக்கான அசுத்த ஆவிகள் நிறைந்த ஒரு மனிதன் இயேசுவுக்கு எதிராக வந்தான். இந்த அசுத்த ஆவிகள், தான் பிடித்திருக்கும் ஒரு மனிதனை தன்னுடைய விருப்பம் போல் செயல்பட வைக்கும். அவனைச் சங்கிலிகளினாலும் கூட கட்ட முடியாதபடி பண்ணி வைத்திருந்தது. இரவும், பகலும் கல்லறைகளிலும், மலைகளிலும் இருந்து கூக்குரலிட்டுக் கொண்டிருந்தான்.

கல்லுகளினால் தன்னையே காயப்படுத்திக் கொண்டிருந்தான். இயேசுவைக் கண்டவுடன் பிசாசு பிடித்த மனிதன் ஓடிவந்து இயேசுவைப் பணிந்து கொண்டான். பிசாசுகள் தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்தி விட வேண்டாமென்றும், அங்கு மேய்ந்து கொண்டிருந்த பன்றி கூட்டத்துக்குள் தங்களை அனுப்ப வேண்டும் என்றும் இயேசுவிடம் வேண்டின. இயேசுவும் அவ்வாறே செய்து அந்த மனிதனை சுகமாக்கினார். அந்த மனிதன் சுகமடைந்து இயேசுவை பின்பற்றுகிறவனாய் மாறினான் என்ற சம்பவத்தை பார்க்கிறோம். இப்படிப்பட்ட அற்புதம் இந்த காலத்திலும் நடக்குமா எவ்வளவு கொடூரமான மனிதனையும் இயேசு மாற்றுவாரா என்று சொல்லி யோசித்துக் கொண்டிருக்கும்போது தான், பீகாரையே கலக்கிக் கொண்டிருக்கும் GEMS மிஷனெரி ஸ்தாபனத்தில் இருந்து ஒரு பரபரப்பான செய்தி கிடைத்தது.



சைலி என்ற நான்கு வயது சிறு பெண், தாய் தகப்பன் அற்ற சூழ்நிலையில் GEMS மிஷனெரி ஸ்தாபனத்திற்கு கொண்டுவரப்பட்டாள். அதிகம் பேசாத கூச்ச சுபாவம் கொண்ட அவள், கிறிஸ்துவின் அன்பினை சிறு வயதிலேயே அறிந்து கொண்டாள். ஆனால் உறவினர்கள் அவளை தந்திரமாக 11 வயதில் அவர்களிடமிருந்து பிரித்து திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டனர். இது GEMS மிஷனரி ஸ்தாபனத்திற்கு வேதனையை கொடுத்தது. ஏற்பாடு செய்திருந்த மணமகன் அரசாங்க கான்ட்ராக்டர் என்ற போதிலும் அவன் ஒரு கொடூரன், ஒரு கிரிமினல், முரட்டாட்டம் பிடித்தவன். சைலியை அவன் வெறுத்தான்.

ஆயினும் சில வருடங்கள் கழித்து அவனுடைய தம்பி மிகவும் வியாதிப்பட்டு வாரணாசியில் உள்ள பனாரஸ் யூனிவர்சிட்டி ஆஸ்பத்திரியில் பல ஆயிரங்கள் செலவழித்தும் பயன்பெறாமல் மருத்துவர்கள் கைவிட்டனர். வீட்டிற்கு அழைத்து வரப்பட்டவனுக்கு மந்திரவாதிகள் மூலம் சுகம் கிடைக்க பல முயற்சிகள்



மேற்கொள்ளப்பட்டன. நிலைமை இன்னும் மோசமாகியது.

அப்போது தன் மனைவியின் ஜெப வாழ்க்கையை கண்ட சைலியின் கணவன் அவளிடத்தில் வந்து என் தம்பிக்காக ஜெபி என்று கேட்டுக் கொண்ட போது, நான் ஜெபிக்க ஆயத்தம் என் இயேசு சுகம் தருவார், ஆனால் நீங்கள் ஆயுதங்களை இனி எடுக்க மாட்டேன் என்றும் இயேசுவை பின்பற்றுவேன் என்றும் வாக்குக் கொடுங்கள் என கேட்டு உறுதி வாங்கினாள்.

அவனும் 'என் தம்பிக்கு சுகம் கிடைக்கவில்லை எனில் உன்னை சுட்டுக் கொன்று விடுவேன் என்றான். இறுதியில் மூன்று மணி நேரம் விடாப்பிடியான ஜெபம் அந்த மகனை காப்பாற்றியது. அவளது கொடூரமான கணவனையும் மாற்றியது. அதன் பிறகு அவர்கள் இருவரும் இயேசுவுக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்தனர். சுவிசேஷத்தை பிறருக்கு சொல்வதால் பலமுறை தாக்கப்பட்ட போதிலும், ஒரு முறை துப்பாக்கியால் சுடப்பட்ட போதிலும் உறுதியாக பணியில் தொடர்கின்றனர்.

**ப்பா...என்ன ஒரு பெரிய மாற்றம் பாத்தீங்களா friends? சுகம் மாத்திரம் அல்லாமல் ஒரு கொடூரனையும் ஊழியக்காரனாய் மாற்றிவிட்டது விந்தை அல்லவோ? எவ்வளவு போராட்டத்தின் மத்தியிலும் விசுவாசத்துடன் இயேசுவை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் போது அவர்கள் மூலம் சுகம் அளிக்கும் வரம் மாத்திரம் அல்ல, ஒரு மனிதனின் மனதை மாற்றக்கூடிய அற்புதமும் செயல்படுகிறது. இப்படிப்பட்ட மாற்றத்தை நிகழ்த்துகிறவர்களாய் மாற்றவே தேவன் நம்மை தெரிந்து கொண்டிருக்கிறார். என்ன நீங்க Readyயா friends?**

(பரபரப்பு செய்திகள் முற்றும்)



# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (7TH DEC)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SUNDAY (14TH DEC)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church, Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre, 16B Naveen Nest Apartment, Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, Grace Auto, 1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, HH Complex, Namnadu Textiles, Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216, 1st Floor, Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SATURDAY (20TH DEC)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center, 3818, 14th Cross, St. Mary's Road, FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3RD SUNDAY (21ST DEC)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI**
**(3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9750955548

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4TH SUNDAY (28TH DEC)

**THIRUVALLUR**
**(3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI**
**(2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop]
41, K.Salai pudur Byepass Road,
Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**






ஜெபம்: எஸ்தர்

# ஜெபக் கையேடு டிசம்பர் 2025

## மதுபானம்

தமிழ்நாட்டில் 4,829 டாஸ்மாக் மதுக்கடைகளும், இந்தக் கடைகளுடன் கூடிய 3,240 பார்களும் இருக்கின்றன. இந்த டாஸ்மாக் மதுக்கடைகள் மூலம் ஒரு நாளைக்கு ரூ.120 கோடி முதல் ரூ.130 கோடிவரை மது விற்பனை நடைபெறுகிறது. வார இறுதி நாட்களில் அது ரூ.140 கோடி முதல் ரூ.150 கோடியாக அதிகரிக்கிறது. பண்டிகை காலங்களில் மது விற்பனை மேலும் 15 சதவீதம் உயருகிறது. கடந்த ஆண்டு தீபாவளி மது விற்பனை ரூ.438 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு ரூ.600 கோடிக்கு மது விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், இலக்கையும் தாண்டி ரூ.789 கோடியே 85 லட்சத்துக்கு மது விற்பனை நடந்துள்ளது. அதாவது, 2025 அக்டோபர் 18-ந் தேதி ரூ.230 கோடியே 6 லட்சத்திற்கும், 19-ந் தேதி ரூ.293 கோடியே 73 லட்சத்திற்கும், தீபாவளி தினத்தன்று ரூ.266 கோடியே 6 லட்சத்திற்கும் என மொத்தம் ரூ.789 கோடியே 85 லட்சத்திற்கு மது விற்பனை நடந்துள்ளது. இந்தியாவில் உள்ள 15 வயதுக்கு மேற்பட்டவர்களில், 18.7% ஆண்களும், 1.3% பெண்களும் மது அருந்துகிறார்கள்.

### ஜெபக்குறிப்புகள்

1. தமிழ்நாட்டில் உள்ள மதுக்கடைகள் முற்றிலும் மூடப்பட **ஜெபிப்போம்.**
2. மதுபானம் மூலம் வருகிற வருமானம் சாபத்தைக் கொண்டு வரும் என்பதை ஆளுகிறவர்கள் உணர்ந்து செயல்பட **ஜெபிப்போம்.**
3. மதுபானத்தினால் குடும்பங்கள், உறவுகளுக்குள் சீரழிவுகள் நடைபெறுவது தடுக்கப்பட **ஜெபிப்போம்.**
4. மதுபானத்தினால் ஏற்படும் விபத்துக்களினால் அநேகர் மரணமடைவது தடுக்கப்பட **ஜெபிப்போம்.**



## பருவகால மாற்றம்

பருவ கால மாற்றத்தால் ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு பகுதியில் காய்ச்சல் பரவுவது வழக்கமாகி விட்டது. அக்டோபர், நவம்பர் மாதங்களில் அதிக அளவில் பரவுகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கி ஏப்ரல் வரை நீடித்தது. இந்த ஆண்டும் காய்ச்சல் மற்றும் சுவாச சம்பந்தமான வைரஸ் தொற்றுக்கள் பரவி வருகின்றன. இன்புளூயன்சா வகை காய்ச்சல் அனைத்து தரப்பு மக்களையும் பாதித்து வரும் நிலையில், டெங்கு பாதிப்பும் அதிகரித்து வருகிறது. தினசரி 60 முதல் 70 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாகச் சுகாதாரத்துறை கூறுகிறது. இந்த ஆண்டில் இதுவரை 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

### ஜெபக்குறிப்பு

1. பருவகால மாற்றத்தினால் ஏற்படும் நோய்களுக்கு விலக்கி, அனைவர் மீதும் தேவ பாதுகாப்பு உண்டாக **ஜெபிப்போம்.**
2. காய்ச்சல் மற்றும் சுவாச நோய்கள் வராமல் தடுக்க அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க **ஜெபிப்போம்.**
3. டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் சுகம் பெறவும், மழை காலங்களில் டெங்கு கிருமி யாரையும் தாக்காதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள **ஜெபிப்போம்.**
4. பருவகால மாற்றத்தினால் தொற்றுகள் பரவாதபடி தடுக்கப்படவும், அனைவரும் தொற்று நோய்களுக்கு விலக்கி பாதுகாக்கப்படவும் **ஜெபிப்போம்.**



## உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு

சர்வதேச அளவில் இந்தியா 5வது மிகப் பெரிய பொருளாதார சக்தியாக உருவெடுத்துள்ள நிலையில், 2024ம் ஆண்டில் பல்வேறு நகரங்களில் எடுக்கப்பட்ட சர்வேயின்படி உணவுக்கான விலை மிகவும் அதிகரித்துள்ளதால், மக்களுக்கு ஆரோக்கியமான உணவுகள் கிடைப்பது பெரும் சவாலாக அமைந்துள்ளது. மும்பையில் கடந்த 5 ஆண்டுகளில் உணவுப் பொருட்களின் விலை 65% அதிகரித்துள்ளது. 93% மக்களுக்கு ஆரோக்கியமான உணவு கிடைக்கவில்லை என்ற தகவலுடன் ரஷ்யா முதல் இடத்திலும், நமது அண்டை நாடான பாகிஸ்தானில் 83% மக்களுக்கு ஆரோக்கியமான உணவு கிடைக்கவில்லை என்ற தகவலுடன் இரண்டாவது இடத்திலும், கடைசியாக 74% மக்களுக்கு ஆரோக்கியமான உணவு இந்தியாவில் கிடைக்கவில்லை என உலக வங்கி அதிர்ச்சித் தரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.


### ஜெபக்குறிப்புகள்:

1. பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்ட அதீத வெள்ளத்தினால் உணவுப் பொருட்களும் பயிர்களும் வீணாகிப் போனதினால் ஏற்பட்டிருக்கும் உணவுத் தட்டுப்பாடுகள் மாற **ஜெபிப்போம்.**

2. வறட்சியின் கோரப்பிடியிலுள்ள தென் மாநிலங்களில் விவசாயம் முற்றிலும் செயலிழந்து உள்ளதால், வருங்காலங்களில் கர்த்தர் ஆசீர்வாதமான நல்ல மழையைத் தந்து ஆசீர்வதிக்க **ஜெபிப்போம்.**

3. கர்த்தர் மழையை வருஷிக்கப் பண்ணி விவசாயிகளின் கண்ணீர்களை துடைக்க **ஜெபிப்போம்.**

4. நமது தேசம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவும் விலைவாசிகள் குறைக்கப்படவும் **ஜெபிப்போம்.**



## கலப்பட மருந்து

போலியான பல நிறுவனங்கள் தவறான மருந்துகளை இந்தியாவில் விற்பனை செய்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது. மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில், 20 குழந்தைகள் கலப்பட இருமல் மருந்தால் உயிரிழந்துள்ளது நாட்டையே உலுக்கியுள்ளது. கோல்ட்ரிப் இருமல் மருந்துகளில், டைஎத்திலீன் க்ளைகால் என்ற உயிர்க்கொல்லி நச்சு, கலப்படமாக இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில், கலப்பட இருமல் மருந்துகளால் 120க்கும் மேற்பட்ட குழந்தைகள் பலியாகியுள்ளனர். இருமல் மருந்துகளில், மருந்துப் பொருட்கள் கரைவதற்கு புரோப்பலின் கிளைக்கால் கிளிசரின் மற்றும் சார்பிடால் போன்ற கரைப்பான்கள் சேர்க்கப்படும். இந்த கரைப்பான்களில் தவறுதலாக தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் டை எத்திலீன் க்ளைகால் கலப்படமாக இருந்ததுதான் உயிரிழப்பிற்கு காரணம். இது, தீவிர சிறுநீரக பாதிப்பு, நரம்பு மண்டல பாதிப்பு, மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய கொடிய விஷம். மருந்து ஏற்றுமதியில் ஆண்டுதோறும் 30 பில்லியன் டாலர், ரூபாய் மதிப்பில் 3 ஆயிரம் கோடி அந்நிய செலவாணி வருகிறது.

### ஜெபக்குறிப்புகள்:

1. போலி விற்பனை மற்றும் விநியோகம் குறித்து கடுமையாக கண்காணிக்க **ஜெபிப்போம்.**

2. நம் தேசத்தில் இது போன்ற போலி மருந்துகள் உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டு அவைகள் அழிக்கப்பட **ஜெபிப்போம்.**

3. கலப்பட மருந்து தயாரிக்கும் நிறுவனங்களின் அனுமதி ரத்து செய்யப்படவும், இதற்கு உடந்தையாக இருக்கிறவர்கள் மனந்திரும்பவும் **ஜெபிப்போம்.**

4. கலப்பட மருந்துகளால் இனியும் எந்த உயிர் சேதங்களும் ஏற்படாதபடி தடுக்கப்பட **ஜெபிப்போம்.**



Heart Beat

# தவறான தாக்கம்!!

ஆலோசனை: அரி

***என்னுடைய வயது 19. எனது அக்காவிற்கு வயது 26. அவளுக்குத் திருமணமாகி 2 குழந்தைகள் இருக்கிறார்கள். என்னுடைய அக்கா கணவருக்கு வயது 30. நான் இப்பொழுது ஒரு கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய அக்காவின் கணவர் ஒருமுறை என்னை மோட்டார் பைக்கில் கல்லூரியில் Drop செய்தார். அதிலிருந்து எனக்கு அவரிடம் ஒரு ஈர்ப்பு உண்டானது. அது சில நாட்களில் காதலாய் மாற ஆரம்பித்தது. நான் அவரை என் கணவராக நினைத்து வாழ்ந்து வருகிறேன். என் அக்காவிற்கு இது தெரிந்து என்னைக் கண்டித்தாள். என் பெற்றோரும் என்னைக் கண்டித்தார்கள். ஆனால் என்னால் அவரை மறக்க முடியவில்லை. என்னுடைய விருப்பமும், எண்ணமும் தவறு என்று எல்லோரும் சொன்னாலும், அதை ஏற்க என் மனம் தயங்குகிறது. Social Mediaவிலும் தொலைக்காட்சிகளிலும் இது போன்ற பல கதைகளும், சீரியல்களும் வந்து கொண்டே தான் இருக்கிறது. நாம் வாழும் காலகட்டத்தில் இதெல்லாம் தவறு என்று கூற முடியுமா? எனக்குப் பிடித்த வாழ்க்கையை நான் வாழ்கிறேன், இப்படித்தான் வாழ வேண்டும் என்று சட்டம் இல்லையே என்று என் நண்பர்களும் சொல்கிறார்கள். மேலும் இது போன்ற உறவால் தவறு ஏதுமில்லை என்று என் ஆழ்மனதும் சொல்கிறது. - ஜூலியட், சென்னை.***




அன்பு சகோதரி ஜூலியட், உங்கள் கடிதம் படிப்பதற்கு அதிர்ச்சியாகவும் சற்று வேதனையாகவும் இருக்கிறது. குடும்பம் என்ற அழகிய உறவை, நாம் கொச்சைப்படுத்தக் கூடாது. நம்முடைய உறவு முறைகள் பண்புகள் நிறைந்தது. உங்கள் அக்காவின் கணவர் உங்கள் பார்வைக்கு தகப்பன் ஸ்தானத்தில் வைத்து மதிக்க வேண்டிய உறவு. அந்த அழகிய உறவை ஈர்ப்பு, காதல் என்று அழைப்பது தவறு, தகாத செயல் என்றே சொல்ல வேண்டும். உங்கள் சகோதரியின் கணவர் மீது உங்களுக்கு ஏற்பட்ட தவறான எண்ணம் இச்சை என்றே அழைக்க முடியும். அது அருவருப்பானது, ஆபத்தானது.

ஜூலியட், **Social Media**க்களிலும், தொலைக்காட்சிகளிலும் இதுபோன்ற காட்சிகள் வருவதாலும், அதில் நடிப்பவர்கள் சிறப்பாக நடிப்பதால், அது சரி என்று ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் நாள்தோறும் இதுபோன்ற காட்சிகளைப் பார்த்துவிட்டுத் தங்கள் வாழ்க்கையிலும் அதைப் பின்பற்றி வாழ்ந்த பலரின் அவல நிலையும், அவர்கள் உறவுகளின் முடிவுகளும், ஆபத்தான விபரீதங்களும் ஊடகங்களில் வந்து கொண்டே தான் இருக்கிறது.



ஒரு ஆணுக்குப் பெண்ணின் மீது ஈர்ப்பு வருவது இயல்பு. ஆனால் அந்த உறவுத் திருமணம் என்ற அழகிய பந்தத்தில் தான் முடிய வேண்டும். இதற்கு மாறாக, இந்த நவீன கலாச்சாரத்தில் 60 வயது ஆணுக்கு 10 வயது சிறுமி மீது ஈர்ப்பு வருவது தவறு, அது மிருகத்தனத்திற்கு ஈடானது. அதேபோல் 40 வயது பெண்ணுக்கு, 15 வயது இளம் வாலிபன் மீது ஈர்ப்பு வருவது காதல் என்று சொல்ல முடியாது; அது காமம், மோகம் என்ற மிகவும் இழிவான செயல் ஆகும்.

இப்படி இந்த நவீன கலாச்சாரத்தில் பண்பு, பாசம், ஒழுக்கம், அடக்கம் போன்றவை மறக்கப்பட்டு, மிருகங்களை விட கீழ்த் தரமாக நடப்பது நாகரீகமும் அல்ல, நவீனமும் அல்ல. மனிதர்கள் தங்கள் சிந்தனையிலும் தொழில் நுட்பத்திலும் **Modern Generation**, இணைய உலகம், **AI** செயற்கை நுண்ணறிவு என்று வளர்ந்துக் கொண்டு வளர்ச்சி




அடைந்தாலும், தேவன் உண்டாக்கிய அழகிய உறவுகளை மதிக்காமல், மனம்போன்ற செயல்களை செய்வதால் தான் பல கடுமையான சட்டங்கள் தேசத்தில் வருகின்றது.

**POCSO** சட்டம் சிறு பிள்ளைகளுக்கு பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டது. ஏனென்றால் சிறு பிள்ளைகளுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டிய பெரியவர்கள், அவர்கள் வாழ்க்கையை சூறையாடி, கெடுத்து, கொலை செய்யும் அளவிற்கு இந்தியாவில் சூழ்நிலை மாறிக்கொண்டு வருகிறது. ஜூலியட், ஒருவேளை இந்தப் பாவச் செயலில் இருந்து நீங்கள் வெளிவந்தால், உங்களுக்கு மறு வாழ்வு உண்டு.

## என்ன செய்யலாம்? சில உதவிகள் உங்களுக்காக...

- முதலில் உங்கள் எண்ணம் தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டும். உங்களுடைய **Mind set** மாற வேண்டும்.
- இதுபோன்ற எண்ணங்களையும் நினைவுகளையும் தூண்டும் படக் காட்சிகளை தவிர்க்கவும்.
- அக்காவின் வீட்டிற்கு செல்வது, அவர்களைப் பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும்.
- மேலும் இவற்றை ஊக்குவிக்கும் தீய நண்பர்களை விட்டு விலகி இருக்க வேண்டும்.
- இந்த எண்ணம் பாவம், இது அசுத்தமான செயலில் என்னை கொண்டு போகும் என்பதை உணர்ந்து, இந்த அடிமைத்தன எண்ணத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று அனுதினமும் ஜெபியுங்கள்.
- இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களை மன்னித்து விடுதலை தருவார்.
- முயன்றால் முடியாதது ஏதும் இல்லை.

## ஒருவேளை இது தவறு அல்ல என்று எண்ணி, தொடர்ந்து இந்த எண்ணத்தை வளரவிட்டால்...

- உங்கள் எண்ணம் செயலாக மாற வாய்ப்பு உண்டு. ஒரு ஒழுக்கமற்ற வாழ்க்கையை தான் வாழ முடியும்.
- உங்கள் சகோதரியின் குடும்பம் பிரிந்து சிதைந்து போக வாய்ப்பு உண்டு.
- அவர்களுடைய 2 பிள்ளைகளின் எதிர்காலம் சூனியமாக மாறக்கூடும்.
- உங்கள் குடும்பத்தில் உங்களை ஒதுக்கி வைக்கலாம். ஏன் சமுதாயமே உங்களை ஒரு அவமானச் சின்னமாக பார்க்கும்.
- உங்கள் படிப்பை இழந்து, குடும்பத்தை இழந்து ஒரு அவமான சின்னமாக மாறலாம்.
- ஒரு கட்டத்தில் சோர்ந்து போய், விரக்தியில் பல தவறான முடிவுகளையும் எடுக்க வாய்ப்பு உண்டு.
- எந்த பாவச் செயலும், முதலில் இன்பமாக தான் இருக்கும். ஆனால் முடிவில் வேதனையும் கண்ணீரும் தான் மிஞ்சும்.
- இது ஒரு எண்ணமாக இருக்கும்போதே, அதை சீர்படுத்தினால் நல்லது. இல்லாவிட்டால் அது செயல்வடிவில் பெறும்போது, பெரும் வேதனையையும் அவமானத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.



**ஜூலியட், நீங்கள் சற்று சிந்தித்து இந்த படுகுழியிலிருந்து வெளியே வர முயலங்கள். இயேசு கிறிஸ்து எந்த பாவத்தையும் மன்னித்து மறுவாழ்வு கொடுப்பார். இந்த தவறான எண்ணத்திலிருந்து, இயேசுவால் உங்களை விடுவிக்க முடியும் சிந்தித்து செயல்படும்.**

# செய்திகள்!




*இந்தியாவில் இதுவரை இல்லாத வகையில்*

## யு.பி.ஐ. பரிவர்த்தனையில் புதிய சாதனை!!




இந்தியாவில் இதுவரை இல்லாத வகையில் யு.பி.ஐ பரிவர்த்தனைமூலம் ஒரே மாதத்தில் ரூ.27 லட்சத்து 28 கோடி அளவிற்கு பணப்பரிமாற்றம் நடைபெற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது. கடந்த அக்டோபர் மாதத்தில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட யு.பி.ஐ. பரிவர்த்தனைகள்குறித்து தேசிய பணப்பரிவர்த்தனை கழகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி அக்டோபர் மாதத்தில் யு.பி.ஐ. மூலமாக மொத்தம் ரூ.2 ஆயிரத்து 70 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இது செப்டம்பர் மாத கணக்கைக் காட்டிலும் 3.6%சதவீதம் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டது. பரிவர்த்தனை மூலமாக இதுவரை இல்லாத வகையில் ரூ.27 லட்சத்து 28 கோடி பண பரிமாற்றம் நடந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

GST வரியில் சீர்திருத்தம் மற்றும் பண்டிகை கால எதிரொலியால் யு.பி.ஐ. மூலம் பண பரிமாற்றம் அதிகரித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. தினமும் சராசரியாக ரூ.66.8 கோடி பரிவர்த்தனைகள் யு.பி.ஐ. மூலம் மேற்கொள்ளப்பட்டதாகத் தேசிய பணப் பரிவர்த்தனை கழகம் தெரிவித்துள்ளது.

- நவம்பர் 3, தினகரன்.

## AIயால் வந்தது சோதனை!

### 1 லட்சம் பேர் டிஸ்மிஸ்: அமேசான், மைக்ரோசாப்ட், இன்டெல் நிறுவன ஊழியர்கள் நீதி!




அமேசான், இன்டெல், மைக்ரோசாப்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்தாண்டு 1,12,000 பணியாளர்களை நீக்கியுள்ளது. அமேசான் நிறுவனம் 30000 பேரைப் பணி நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளது.

AI தொழில்நுட்பம் காரணமாக இன்டெல், மைக்ரோசாப்ட், டிசிஎஸ் உட்பட 218 நிறுவனங்களில் 1,12,000 தொழில் நுட்ப ஊழியர்கள் தங்கள் வேலைகளை இழந்து உள்ளதாகச் சுயாதீன கண்காணிப்பு தளமான லே ஆப்ஸ். எப்.ஒய்.ஐ. தெரிவித்துள்ளது.

2022-ம் ஆண்டில், அமேசான் நிறுவனம் அதன் ஊழியர்களில் 27,000-க்கும் மேற்பட்டோரை பணி நீக்கம் செய்தது. தற்போது 30 ஆயிரம் பேரைப் பணிநீக்கம் செய்து அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. இன்டெல் நிறுவனம் இந்தாண்டு 24,000 பணியாளர்களைக் குறைக்க உள்ளது.

இதன் மூலம் அதன் பணியாளர்களின் எண்ணிக்கை 1 லட்சத்திலிருந்து 75,000 குறையும். டிசிஎஸ் நிறுவனம் இந்தாண்டு 20,000 பணியிடங்களைக் குறைக்கிறது. மைக்ரோசாப்ட் நிறுவனம் 9000 ஊழியர்களைக் குறைத்துள்ளது.

- நவம்பர் 2, தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# கிறிஸ்துமஸ் தினத்தில் மற்றவர்களுக்கு உதவ சில TIPS

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நன்மை செய்யுங்கள் என்று சொல்லி இருக்கிறார். எனவே இந்தக் கிறிஸ்துமஸ் நாளில் நன்மை செய்வதற்கு நமக்கு நல்ல ஒரு வாய்ப்பு. ஒருசிலர் நன்மை செய்ய வேண்டும் என்று விரும்புவார்கள், ஆனால் எப்படி செய்ய வேண்டும் என்று தெரியாது. அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு சில வழிகள்...

- பசியில் உள்ளவர்களுக்கு உணவு வழங்கலாம்.
- பின்தங்கிய குடும்பங்களுக்குக் கிறிஸ்துமஸ் பரிசுகளை வழங்கலாம்.
- தேவையுள்ள குழந்தைகளுக்குப் பரிசுகள் கொடுக்கலாம்.
- முதியவர்கள் மற்றும் தனிமையில் இருப்போரைச் சந்தித்துப் பேசி, அவர்களுக்குத் தேநீர் அல்லது உணவு வழங்கி அவர்களுடன் நேரம் செலவிடலாம்.
- வீடற்றவர்களுக்கு உணவு, போர்வைகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை வழங்கலாம்.

**"நன்மை செய்ய உனக்குத் திராணி இருக்கும்போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே"** (நீதி 3:27) என்று வேத வசனம் நமக்குச் சொல்கிறது. உங்களால் செய்ய முடியும்போது, செய்யாமல் இருக்கக் கூடாது என்று கூறுகிறது. நன்மை செய்ய உங்களுக்குப் பெலன் இருக்கும்போது, அதைச் செய்யத் தகுந்தவர்களுக்கு செய்யத் தயங்க வேண்டாம் என்பதை நமக்கு வேதம் தெள்ளத்தெளிவாக வலியுறுத்துகிறது.

**"நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும் வேண்டும்"** (1 தீமோத்தேயு 6:18) என்று பவுல் தீமோத்தேயுக்கு சொல்கிறார்.

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 11 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

